தினகரன் 03.04.2014



மாற்றுத்திறனாளிகள் முன்பின் இயக்கும் இரு சக்கர வாகனத்தை கண்டுபிடித்த திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரி இயந்திரவியல் துறை இறுதியாண்டு மாணவர்களுடன் கல்லூரி முதல்வர் விஜயராகவன்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய கருவி கண்டுபிடிப்பு

## ஜெயா கல்லூரி மாணவர்கள் சாதனை

திருவள்ளூர், ஏப்.3: மாற்றுத்திறனாளிகள் பயன் பெறும் வகையில் புதிய கருவி கண்டுபிடித்து இரு சக்கர வாகனங்களில் பொருத்தி திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். இந்த சாதனைக்கு கல்லூரி உதவி பேராசிரியர்கள் மற்றும் இயந்திரவியல் துறை பேராசிரியர்கள் உறுதுணையாக இருந்தனர்.

இந்த கருவியை கண்டுபிடித்த இயந்திரவியல் துறை இறுதியாண்டு மாணவர்கள் பாலாஜி, தினேஷ், கிருஷ்ணபிரசாத், மற்றும் வினோத்குமார் ஆகியோருக்கு பாராட்டு விழா நடந்தது.

கல்லூரி தலைவர் அ.கனகராஜ், செயலாளர் க.விஜயகுமாரி, துணைத்தலைவர் க.நாவராஜ், முதல்வர் விஜயராகவன், நிர்வாக அலுவலர் ரவி, துறைத்தலைவர் தினேஷ்குமார், மேற்பார்வையாளர் ராஜேந்திரன், கணேசன் ஆகியோர் சாதனை படைத்த மாணவர்களை பாராட்டி பரிசு வழங்கினர். துறை பேராசிரியர்களும், மாணவர்களும் அவர்களை பாராட்டினர்.